Ours bank with
Bank of Baroda

மதுரை மணி
Madurai Mani Tamil Evening Daily
தினசரி தமிழ் நாளிதழ் ®
ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்

New College House
(A Heritage Hotel)
2342971 (3 Lines)
4372900 (4 Lines)
99526 02900
95669 84900
College House
2, Town Hall Road, Madurai-625 001.

| மதுரை பதிப்பு | *மணி 54 | * ஓசை 33 | உள்ளூர் - 02.02.2026 | திங்கள் | விலை ரூ.3/- | பக்கங்கள்-4 | Website : http://maduraimaninews.com |
|---|---|---|---|---|---|---|---|
| Madurai Edition | *Vol 54 | * Issue 33 | வெளியூர் - 03.02.2026 | செவ்வாய் | Price Rs. 3/- | Pages -4 | Email: maduraimaninews@gmail.com |

**இந்திய தபால் துறையில் 2019 காலியிடங்கள்!** | **பாஸ்போர்ட்/வருமானவரி புது ரூல்ஸ்?** | **கம்யூ. தலைவர் நல்லகண்ணு மருத்துவமனையில்!** | **இறங்கி வரும் தங்கம், வெள்ளி விலை!**

# பார்லிமென்டில் ஜனாதிபதி உரை மீதான விவாதம்; பிப்ரவரி 4-ல் பிரதமர் மோடி உரை!

புதுடெல்லி, பிப். 02–

ஜனாதிபதி உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதம் (பிப்ரவரி 02) லோக்சபாவில் தொடங்குகிறது.



ஜனாதிபதி திரவுபதி முர்மு உரையுடன், கடந்த 28ல், பட்ஜெட் கூட்டத்தொடர் துவங்கியது. 2026 – 27ம் நிதியாண்டுக்கான மத்திய பட்ஜெட்டை, பா.ஜ., மூத்த தலைவரும், மத்திய நிதி அமைச்சருமான நிர்மலா சீதாராமன் நேற்று காலை 11:00 மணிக்கு தாக்கல் செய்தார். பட்ஜெட்டில் கவர்ச்சிகரமான அறிவிப்புகள் எதுவும் பெரிதாக இடம்பெறவில்லை.

இந்நிலையில் ஜனாதிபதி உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதம் (பிப்ரவரி 02) லோக்சபாவில் தொடங்குகிறது. இந்த விவாதத்திற்காக மொத்தம் 18 மணி நேரம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மத்திய அமைச்சர் சர்பானந்த சோனோவால் பாஜ., சார்பில் விவாதத்தைத் தொடங்கி வைக்கிறார். இந்த விவாதத்திற்காக மொத்தம் 18 மணி நேரம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பிரதமர் மோடி பிப்ரவரி 4ம் தேதி பதிலளிப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் செங்கல்பட்டு மாவட்டம், மாமல்லபுரத்தில் நடைபெற்ற ‘‘தமிழ்நாடு உலகளாவிய சுற்றுலா உச்சி மாநாடு 2026’’ தொடக்க விழாவில், பல்வேறு சுற்றுலா நிறுவனங்களின் சார்பில் அமைக்கப்பட்டுள்ள அரங்குகளை திறந்து வைத்து பார்வையிட்டார். இந்த நிகழ்வின்போது, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், சுற்றுலாத் துறை அமைச்சர் ஆர். ராஜேந்திரன், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க. மணிவாசன், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை செயலாளர் வி. அருண் ராய், தமிழ்நாடு தொழில் வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மருத்துவர் தாரேஸ் அகமது, சுற்றுலாத்துறை ஆணையர் ஜெ. இன்னசென்ட் திவ்யா, செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் தி. சினேகா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

# ஹெச்-1பி விசா: 2027 நிதியாண்டிற்கான பதிவு மார்ச் 4 முதல் தொடக்கம்!

அமெரிக்கா, பிப். 02–

அமெரிக்கக் குடியுரிமை மற்றும் குடிவரவு சேவைகள் (USCIS) சனிக்கிழமை அறிவித்தபடி, 2027 ஆம் நிதியாண்டிற்கான ஹெச்–1பி விசா வரம்பிற்கான ஆரம்பப் பதிவுக் காலம் மார்ச் 4 (கிழக்கு நேரப்படி நண்பகல்) தொடங்கி மார்ச் 19 (கிழக்கு நேரப்படி நண்பகல்) வரை திறந்திருக்கும்.

இந்தக் காலகட்டத்தில், ஹெச்–1பி விசா பெற விரும்பும் விண்ணப்பதாரர்கள் மற்றும் பிரதிநிதிகள் ஒவ்வொரு பயனாளியையும் யு.எஸ்.சி.ஐ.எஸ் ஆன்லைன் கணக்கு மூலம் மின்னணு முறையில் பதிவு செய்ய வேண்டும் மற்றும் ஒவ்வொரு பதிவுக்கும் 215 அமெரிக்க டாலர்கள் பதிவுக் கட்டணத்தைச் செலுத்த வேண்டும் என்று அதிகாரப்பூர்வ அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மார்ச் 31–ஆம் தேதிக்குள் தேர்வு அறிவிப்பை அனுப்ப யு.எஸ்.சி.ஐ.எஸ் உத்தேசித்துள்ளது.

ஹெச்–1பி திட்டமானது அமெரிக்க முதலாளிகள் ‘‘சிறப்புத் தொழில்களில்’’ வெளிநாட்டுத் தொழிலாளர்களைத் தற்காலிகமாகப் பணியமர்த்த அனுமதிக்கிறது. 2027 ஆம் நிதியாண்டிற்கு, ஹெச்–1பி பதிவுச் செயல்பாட்டில் பயனாளியின் பதிவு தேர்ந்தெடுக்கப்பட்டால் மட்டுமே, அந்த விண்ணப்பதாரர் ஹெச்–1பி மனுவைத் தாக்கல் செய்ய முடியும் என்று USCIS தெரிவித்துள்ளது.

**ஹெச்–1பி வரம்பிற்கான காலவரிசை மற்றும் பதிவு செயல்முறை**

ஹெச்–1பி வரம்பிற்கான அனைத்துப் பதிவுகளும் யு.எஸ்.சி.ஐ.எஸ் ஆன்லைன் கணக்கு மூலம் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்று யு.எஸ்.சி.ஐ.எஸ் கூறியுள்ளது. ஒரு நிறுவனத்திடம் கணக்கு இல்லை என்றால், அவர்கள் ஒரு நிறுவன கணக்கை உருவாக்க வேண்டும் என்று அந்த முகமை மேலும் தெரிவித்துள்ளது.




பிரதிநிதிகள் எந்த நேரத்திலும் நிறுவன வாடிக்கையாளர்களைக் கணக்குகளில் சேர்க்கலாம், ஆனால் பயனாளிகளின் விவரங்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய 215 அமெரிக்க டாலர்கள் கட்டணத்தை மார்ச் 4 அன்று பதிவுக் காலம் தொடங்கிய பின்னரே செலுத்த முடியும்.

ஆரம்பப் பதிவுக் காலம் முடிந்த பிறகு தேர்வுகள் நடைபெறும் என்று அந்த முகமை தெரிவித்துள்ளது. குறைந்த பட்சம் ஒரு பதிவாவது தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரர்களுக்கு மார்ச் 31–ம் தேதிக்குள் ஆன்லைன் கணக்குகள் மூலம் யு.எஸ்.சி.ஐ.எஸ் தேர்வு அறிவிப்புகளை அனுப்பும்.

**2027 நிதியாண்டிற்கான புதிய ஹெச்–1பி விதிகள்**

உள்நாட்டுப் பாதுகாப்புத் துறையின் கூற்றுப்படி, 2027–ம் நிதியாண்டுக்கான பதிவுகள் தேர்ந்தெடுக்கப்படும் விதிகள் மாற்றப்பட்டுள்ளன. ‘‘புதிய ஹெச்–1பி தேர்வு செயல்முறையானது, அமெரிக்கத் தொழிலாளர்களின் ஊதியம், வேலை நிலைமைகள் மற்றும் வேலை வாய்ப்புகளைச் சிறப்பாகப் பாதுகாப்பதற்காக, அதிகத் திறன் கொண்ட மற்றும் அதிக ஊதியம் பெறும் வெளிநாட்டினருக்கு விசா வழங்குவதற்கு முன்னுரிமை அளிக்கிறது,’’ என்று யு.எஸ்.சி.ஐ.எஸ் குறிப்பிட்டுள்ளது.

2027–ம் நிதியாண்டிற்கான வருடாந்திர வரம்பைத் தாண்டி பதிவுகள் வரும் பட்சத்தில், முறையாகச் சமர்ப்பிக்கப்பட்ட தனிப்பட்ட பயனாளிகளின் பதிவுகளில் இருந்து ‘வெயிட்டட் செலக்ஷன்’ முறையை அந்த முகமை மேற்கொள்ளும் என்று யு.எஸ்.சி.ஐ.எஸ் தெரிவித்துள்ளது.

**டிரம்ப்பின் 100,000 லட்சம் டாலர்கள் கட்டணம்**

அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப்பின் செப்டம்பர் 2025 பிரகடனமான ‘‘குறிப்பிட்ட குடியேற்றம் அல்லாத தொழிலாளர்களின் நுழைவு மீதான கட்டுப்பாடு’’ என்பதைக் குறிப்பிட்டுப் பேசிய யு.எஸ்.சி.ஐ.எஸ், அந்தப் பிரகடனம் மின்னணுப் பதிவுச் செயல்முறையை நேரடியாகப் பாதிக்காது என்று கூறியுள்ளது.


இருப்பினும், தேர்ந்தெடுக்கப்பட்ட பதிவுகளைக் கொண்ட முதலாளிகள், ஹெச்–1பி மனுவைத் தாக்கல் செய்வதற்கு முன்னதாக, கூடுதலாக 1,00,000 அமெரிக்க டாலர்கள் (சுமார் ரூ.83 லட்சம்) கட்டணத்தைச் செலுத்த வேண்டியிருக்கும்.

**பதற்றம்!!**

# அணு ஆயுத போரை சந்திக்க போகிறதா உலகம்?

## முடிவுக்கு வரும் அமெரிக்கா – ரஷ்யா ஒப்பந்தத்தால்!



அமெரிக்கா, பிப். 02–

உலக நாடுகள் தங்களுடைய ஆயுத பலத்தை நிரூபணம் செய்வதற்காக அணு ஆயுதங்களை தயாரித்து வைத்திருக்கின்றன. இந்தியா கூட அணு ஆயுதத்தை தயாரித்து வைத்திருக்கிறது. உலக அளவில் அதிக எண்ணிக்கையில் அணு ஆயுதங்கள் இருக்கும் நாடாக அமெரிக்கா மற்றும் ரஷ்யா இருக்கின்றன. இந்த நாடுகள் தேவையில்லாமல் அணு ஆயுதங்கள் பயன்படுத்துவதை குறைக்கும் நோக்கிலும் மேற்கொண்டு இவை அணு ஆயுதங்களை மேம்படுத்துவதை கட்டுப்படுத்தவும் தான் இந்திய அமெரிக்கா மற்றும் ரஷ்யா இடையே ஒரு அணு ஆயுத ஒப்பந்தம் என்பது ஏற்படுத்தப்பட்டது. அமெரிக்கா ரஷ்யா இடையிலான இந்த அணு ஆயுத ஒப்பந்தம் நியூ ஸ்டார்ட் ஒப்பந்தம் என அழைக்கப்படுகிறது. அமெரிக்கா மற்றும் ரஷ்யா ஆகிய இரு அணுசக்தி நாடுகளுக்கு இடையே இருக்கும் கடைசி பன்னாட்டு ஒப்பந்தம் இது. இந்த ஒப்பந்தம் வரக்கூடிய ( 05.02.2026)வியாழக்கிழமை நள்ளிரவோடு காலாவதியாக இருக்கிறது.

கடந்த 2010 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட இந்த ஒப்பந்தம் இரண்டு நாடுகளும் தங்களுடைய அணு ஆயுதங்களின் எண்ணிக்கையை கட்டுப்படுத்துவதை உறுதி செய்தது. அதாவது இரண்டு நாடுகளும் 1550 அணு ஆயுதங்கள் மட்டுமே வைத்திருக்க வேண்டும் என ஒரு கட்டுப்பாடு கொண்டு வரப்பட்டது. இந்த ஒப்பந்தம் முடிவுக்கு வருவது குறித்து கடந்த செப்டம்பரில் பேட்டி அளித்த ரஷ்ய அதிபர் புதின் ஓராண்டுக்கு இந்த ஒப்பந்தத்தை நீட்டிக்க வேண்டும் என பரிந்துரை செய்தார். ஆனால் இது தொடர்பாக டிரம்ப் இதுவரை தீர்மானமான பதிலை தெரிவிக்கவில்லை.

!! அமெரிக்கா அரசாங்கம் தற்போது சீனாவும் வேகமாக அணு ஆயுதங்களை மேம்படுத்தி வருவதால் இந்த நியூ ஸ்டார்ட் ஒப்பந்தத்தில் அமெரிக்கா, ரஷ்யா என இரண்டு நாடுகள் மட்டும் இல்லாமல் சீனாவையும் கொண்டு வர வேண்டும் என எண்ணுகிறது. சீனாவை இந்த ஒப்பந்தத்திற்குள் கொண்டு வந்து விட்டால் அந்த நாடு அணு ஆயுதங்கள் மேம்படுத்துவதை கட்டுப்படுத்தலாம் என நினைக்கிறார் டிரம்ப். ஆனால் இது தொடர்பான எந்த ஒரு அதிகாரப்பூர்வமான பேச்சுவார்த்தைகளையும் இந்த மூன்று நாடுகளும் இதுவரை தொடங்கவே இல்லை.

கூடிய விரைவில் இந்த ஒப்பந்தமும் முடிவடையும் இருப்பதால் அமெரிக்கா ரஷ்யா இருநாடுகளுக்கும் இடையே அணு ஆயுதங்களை கட்டுப்படுத்தும் சட்டபூர்வமான கட்டுப்பாடு இல்லாமல் போகும். இதன் காரணமாக இரு நாடுகளுக்கும் இடையே அணு ஆயுத போட்டி உருவாக வாய்ப்பு உள்ளது. ஏற்கனவே பல்வேறு விவகாரங்களில் அமெரிக்காவிற்கும் ரஷ்யாவிற்கும் மோதல் போக்கு நீடிக்கிறது.

அமெரிக்க அதிபர் டிரம்ப் பல்வேறு சர்வதேச அமைப்புகளில் இருந்தெல்லாம் வெளியில் வந்து கொண்டிருக்கிறார். அமெரிக்காவுக்கே முதல் உரிமை என்ற முழக்கத்தை நோக்கி தொடர்ந்து அறிவிப்புகளை வெளியிட்டு வருகிறார். இந்த சூழலில் மீண்டும் ஒரு அணு ஆயுத கட்டுப்பாடு ஒப்பந்தத்தில் அவர் ஈடுபடுவாரா என்பது கேள்விக்குறியாகி இருக்கிறது. இது உலக அளவில் ஒரு அணு ஆயுதப்போரை ஏற்படுத்துமோ என்ற அச்சத்தை ஏற்படுத்தி இருக்கிறது.




தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் முன்னிலையில் செங்கல்பட்டு மாவட்டம், மாமல்லபுரத்தில், ‘‘தமிழ்நாடு உலகளாவிய சுற்றுலா உச்சி மாநாடு 2026’’ தொடக்க விழாவில், தமிழ்நாட்டில் சுற்றுலாவை மேம்படுத்திட 22,794.78 கோடி ரூபாய் உறுதியளிக்கப்பட்ட முதலீடு மற்றும் 65,937 நபர்களுக்கு உறுதியளிக்கப்பட்ட வேலைவாய்ப்பு என்ற வகையில் 127 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. இந்த மாநாட்டில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் ஆர். ராஜேந்திரன், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா, சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.ஆர். ராஜா, இ. கருணாநிதி, எஸ்.எஸ். பாலாஜி, மு. பாபு, வரலட்சுமி, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் க.மணிவாசன், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை செயலாளர் வி. அருண் ராய், இ.ஆ.ப. தமிழ்நாடு தொழில் வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மருத்துவர் தாரேஸ் அகமது, சுற்றுலாத்துறை ஆணையர் ஜெ. இன்னசென்ட் திவ்யா, செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் தி. சினேகா, இந்திய கிரிக்கெட் வீரர் ரவிச்சந்திரன் அஸ்வின், ஆனந்த் குழுமத்தின் செயல் தலைவர் அஞ்சலி சிங், Indian Association of Tour Operators தலைவர் ரவி கோசைன், WTTCH செயல் இயக்குநர் சுமிட்ரோ கர், VIN Fast தலைவர் பாம் சான் ச்சாவ், பல்வேறு முதலீட்டாளர்கள், சுற்றுலா நிறுவனங்களின் நிர்வாகிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

தலையங்கம் மதுரை மணி

திங்கட்கிழமை 02.02.2026

விசுவாவசு தமிழ் வருடம்

தை மாதம் 19-ம் தேதி

## SGB: தங்கம் பத்திரம் வாங்கியவர்களுக்கு வேட்டு..?




அதாவது ஒரு தனிநபரிடம் இருந்து மற்றொருவர் வாங்கியிருந்தால் (secondary market) இந்த சலுகை இல்லை. Also Read பட்ஜெட்டில் இந்த அறிவிப்பு மட்டும் வந்தா போதும்..!! தங்கம், வெள்ளி விலை மேலும் குறையும்..!! ரிசர்வ் வங்கியால் வெளியிடப்படும் அனைத்து SGB வெளியீடுகளுக்கும் இந்த விலக்கு ஒரே மாதிரியாக பொருந்தும். முன்பு இந்த மூலதன லாப வரி விலக்கு என்பது பிரிவு 70(1)(x)ன் கீழ் முதிர்ச்சி அடைந்து பணத்தை பெறும் அனைவருக்கும் வழங்கப்பட்ட போது கிடைத்தது. இப்போது இது ஆர்பிஐயிடம் இருந்து நேரடியாக வாங்கியவப்களுக்கு மட்டுமே கிடைக்கும் என விதியை மாற்றியுள்ளது. இரண்டாம் சந்தையில் வாங்கிய முதலீட்டாளர்கள் பொதுவாக விலை ஏற்ற இறக்கத்தை பயன்படுத்துபவர்கள் அல்லது பணப்புழக்கத்துக்காக வாங்குபவர்களாக இருப்பார்கள். இதனால் secondary marketல் வாங்கிய விலைக்கும், விற்கப்படும் மதிப்புக்கும் இடையிலான வித்தியாசத்துக்கு வரி செலுத்த வேண்டியிருக்கும். இது அவர்களுக்கு கூடுதல் வரி சுமையை ஏற்படுத்தும். இந்த மாற்றத்தின் நோக்கம் வரி சலுகையை உண்மையாக ஆர்பிஐயிடம் இருந்து வாங்குபவர்களுக்கு மட்டும் அளிக்க வேண்டும் என்ற முடிவில் எடுக்கப்பட்டவை. இரண்டாம் சந்தை பரிவர்த்தனைகளுக்கு இந்த சலுகை தவறுதலாக விரிவடைவதை தடுப்பதேஇதன் குறிக்கோள்.நீண்டகால முதலீட்டாளர்களுக்கு கேப்பிடல் கெயின்ஸ் வரி சலுகை தொடரும்.

SGB–ஐ பாதுகாப்பான தங்க முதலீடாக பார்ப்பவர்கள் ஆரம்ப வெளியீட்டில் வாங்கினால் வரி விலக்கு கிடைக்கும். இரண்டாம் சந்தையில் வாங்கினால் விற்கும் போது வரி செலுத்த வேண்டியிருக்கும், இது STCG மற்றும் LTCG அடிப்படையில் செலுத்த வேண்டும்.

## கம்யூ. மூத்த தலைவர் நல்லகண்ணு மீண்டும் மருத்துவமனையில் அனுமதி!




சென்னை, பிப். 02–

முதுபெரும் அரசியல்வா தியும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் நல்லகண்ணுக்கு (வயது 100), மூச்சுத் திணறல் ஏற்பட்ட தையடுத்து மருத்துவம னையில் அனுமதிக்கப்பட்டு ள்ளார். அங்கு, அவருக்கு மருத்துவர்கள் தொடர்ந்து சிகிச்சை அளித்து வருகின்ற னர். சென்னை ராஜீவ் காந்தி மருத்துவமனையில் நல்லகண்ணுக்கு வெண்டிலேட்டர் உதவியுடன் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதாகவும், மூத்த மருத்துவர்கள் அடங்கிய குழுவின் கண்காணிப்பில், நல்லகண்ணுக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## சினிமா துளிகள்..!

### பொது நிகழ்ச்சியில் ஸ்டார் நடிகரின் மனைவி!




பிரபல நடிகர் திலீப்பும் காவ்யா மாதவனும் 2016 நவம்பர் 25 அன்று திருமணம் செய்துகொண்டனர். திருமணத்திற்குப் பிறகு தனது குடும்ப வாழ்க்கைக்கு முன்னுரிமை அளித்து, காவியா மாதவன் நடிப்பிலிருந்து விலகினார். 2016–ல் வெளியான அடூர் கோபாலகிருஷ்ணனின் 'பின்னையும்' எனற படமே காவ்யா கடைசியாக நடித்த திரைப்படம். 2019 அக்டோபரில் திலீப்–காவ்யா தம்பதிக்கு மகாலட்சுமி என்ற பெண் குழந்தை பிறந்தது.

சமீபத்தில் ஆஸ்திரேலியாவில் தனது அண்ணன் மற்றும் குடும்பத்தினருடன் விடுமுறையைக் கழித்த காவ்யாவின் புகைப்படங்களும் சமூக வலைதளங்களில் வைரலாகின. சினிமாவில் மீண்டும் அவர் களமிறங்குவாரா என்ற எதிர்பா ர்ப்பு மலையாள ரசிகர்கள் மத்தியில் எப்போதும் இருந்து கொண்டே இருக்கிறது. மலையாளத்தில் பல வெற்றிப்பட ங்களில் நடித்திருந்த காவியா மாதவன், தமிழில் விக்ரமுடன் காசி, என் மன வானில், சாது மிரண்டா, உள்ளிட்ட படங்களில் நடித்துள்ளார். பிரசன்னாவுடன் இவர் நடித்த சாது மிரண்டா படம் தான் தமிழில் நடித்த கடைசி படமாகும்.

## ஏப்ரல் 1 முதல் நடைமுறைக்கு வரும் புதிய வருமான வரி சட்டம்!

டெல்லி, பிப். 02–

மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் ஏப்ரல் 1ஆம் தேதியிலிருந்து புதிய வருமான வரி சட்டம் நடைமுறைக்கு வரும் என அறிவிப்பு வெளியிட்டு இருக்கிறார். பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டுள்ளதன் மூலம் புதிய வருமான வரி சட்டம் மீண்டும் கவனம் பெற்றுள்ளது.




இந்தியாவில் கடந்த 60 ஆண்டுகளுக்கு மேலாக இருக்கக்கூடிய பழைய வருமான வரி சட்டத்திற்கு மாற்றாக புதிய வருமான வரி சட்டம் 2025 கடந்த ஆண்டு நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் நிறைவேற்றப்பட்டது. இந்த சட்டத்திற்கு குடியரசுத் தலைவரும் ஒப்புதல் அளித்து விட்டார். இந்த நிலையில் புதிய வருமான வரி சட்டம் ஏப்ரல் ஒன்றாம் தேதியில் இருந்து நடைமுறைக்கு வருகிறது என அறிவித்தி ருக்கிறார் அமைச்சர் நிர்மலா சீதாராமன். 1961ஆம் ஆண்டு இந்தியாவில் நிறைவேற்றப்பட்ட வருமான வரி சட்டத்தில் பல சிக்கல்களும் குழப்பங்களும் இருக்கின்றன.

இது வருமான வரி கணக்கு தாக்கல் செய்பவர்களுக்கும் கணக்கினை சரிபார்ப்பதற்கும் ,புகார்களை சரி செய்வதற்கும் சிக்கலாக இருக்கிறது. இந்நிலையில் அதனை எளிமைப்படுத்தும் வகையில் புதிய வருமான வரி சட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது. புதிய வருமான வரி சட்டத்தில் வருமான வரி விகிதமோ அல்லது வருமான வரி உச்ச வரம்போ மாற்றப்படவில்லை. அதற்கு மாறாக எளிமைப்படுத்தப்பட்ட வருமான வரி விதிகள் மற்றும் படிவங்கள் கொண்டு வரப்பட்டுள்ளன. இதற்கான அறிவிப்புகள் விரைவில் வெளியாகும் என நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

வரி செலுத்துவோர் புதிய படிவங்கள், விதிகளை பற்றி அறிந்து கொள்ள விரிவான கால அவகாசம் வழங்கப்படும் என்றும் அவர் உறுதி அளித்துள்ளார். பழைய சட்டத்திற்கும் இதற்கும் உள்ள வித்தியாசமே எளிமையான விதிமுறைகள் தான். வருமான வரி கணக்கு தாக்கல் செய்வது மற்றும் வருமான வரி சட்டம் சம்பந்தப்பட்ட பிரிவுகளை இதில் எளிமையாக்கி இருக்கிறார்கள். 1961 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட பழைய வருமான வரி சட்டத்துடன் ஒப்பிடும்போது புதிய வருமான வரி சட்டத்தில் எண்ணிக்கை விதிகள் பாதி அளவு குறைக்கப்பட்டு இருக்கின்றன.

## விவசாயிகளுக்கு அடிச்சது ஜாக்பாட் ரேஷனில் கேழ்வரகு, மத்திய அரசு முக்கிய அறிவிப்பு!

டெல்லி, பிப். 02–

ரேஷன் கடைகளில் கேழ்வ ரகு கொள்முதல் செய்வதை குறித்து மத்திய அரசு வெளியிட்ட அறிவிப்பின் மூலம், இனி ஏழை எளிய குடும்ப மக்களுக்கு குறைந்த விலையில் சத்தான உணவு கிடைக்கும். மேலும் குழந்தை களுக்கும் தேவையான சத்துக்கள் கிடைக்கும். திட்டத்தின் முழுமையான விவரத்தை இங்கே காண லாம். குழந்தைகளுக்கு தற்போது போதுமான அளவு ஊட்டச்சத்துக்கள் கிடைக்கா மல் இருக்கும் நிலையில், தற்போது ஊட்டச்சத்துக்கள் நிறைந்த கம்பு, ராகி போன்ற சிறுதானியங்களின் தேவை மக்களிடையே அதிகரித்துக் கொண்டே வருகிறது. இதன் ஒரு பகுதியாக ஏழை மக்கள் பயன்பெறும் வகையில் தற்போது மத்திய அரசு ரேஷன் கடைகளில் கேழ்வ ரகு விநியோகம் செய்ய உள்ளதாக தகவல் வெளி யாகியுள்ளது.



அதன்படி ராணுவ வீரர்க ளின் உணவுப் பட்டியலில் தற்போது சிறுதானியங்களை கட்டாயம் சேர்க்க மத்திய அரசு உத்தரவு பிறப்பித்து ள்ளது. எனவே இனி ராணுவ வீரர்களுக்கான உணவில் சத்து நிறைந்த சிறுதானி யங்களை மத்திய அரசு சேர்த்துள்ளது. அதுமட்டு மின்றி தமிழக அரசு ரேஷன் கடைகள் மூலம் கேழ்வரகு வழங்கத் திட்டமிட்டுள்ளது, மேலும் இதற்கான பணிகளும் தீவிரமாக நடைபெற்று வருகிறது. இந்த முயற்சி தற்போது மாநிலங்களிலும் எடுக்கப்பட்டு வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

இதனிடையே தமிகழ்த்தில் கடந்த மூன்று ஆண்டுகளில் மொத்தம் 3578 விவசாயிகளிடமிருந்து சுமார் 6453 மெட்ரிக் டன் கேழ்வரகு கொள்முதல் செய்யப்பட்டது. அதுமட்டுமின்றி இதன் மூலம் விவசாயிகளுக்கு ரூ.26.48 கோடி வழங்கப்பட்ட தாக தமிழக உணவுத்துறை அமைச்சர் சக்கரபாணி தெரிவித்து இருந்தார்.

மேலும் 2025–2026 கொள்முதலில், கிருஷ்ணகிரி, சேலம், தருமபுரி மற்றும் தருமபுரி ஆகிய மாவட்டங்களில் 6000 மெட்ரிக் டன் கொள்முதல் செய்ய அரசு இலக்கு நிர்ணயித்து, நவம்பர் 2025 முதல் ஜனவரி 2026 வரை நேரடி கொள்முதல் நிலை யங்களை திறக்க நுகர்பொ ருள் வாணிப கழகத்திற்கு அனுமதி வழங்கப்பட்டது. அதுமட்டுமின்றி கடந்த ஆண்டை விட மெட்ரிக் டன்னிற்கு ரூ.5960 உயர்த்தி, ஒரு மெட்ரிக் டன் ரூ. 48860 விலையில் கொள்முதல் செய்யப்பட்டது என்பது கண்டிக்கத்தக்கது.

இதற்கிடையே தற்போது தமிழக விவசாயிகளிடம் இருந்து கேழ்வரகு கொள்முதல் செய்வதற்கான அவகாசம் இந்த மாதம் முடிவடையும் கூறப்பட்டு வரும் நிலையில், இந்த கால அவகாசம் வரும் ஆகஸ்ட் வரை மத்திய அரசு நீட்டிக்க உள்ளதாக கூறப்படுகிறது. அதுமட்டுதமின்றி நடப்பு பருவத்தில் தற்போது வரை 965 டன் கேழ்வரகு கொள்மு தல் செய்யப்பட்டுள்ளதாக தகவல் தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில், கேழ்வரகு கொள்முதல் செய்வதற்கான அவகாசம் கடந்த 31ம் தேதியுடன் முடிவடைந்த நிலையில், இதற்கான காலக்கெடுவி நீட்டிக்குமாறு மத்திய அரசுக்கு வாணிப கழகம் கோரிக்கை விடுத்தது. தற்போது இந்த கோரிக்கையை ஏற்று, கேழ்வ ரகு கொள்முதலுக்கான அவகாசம் வரும் ஆகஸ்ட் மாதம் வரை நீட்டிக்கப்பட்டு ள்ளது. அதன்படி அறுவடை தாமதமான விவசாயிகளும் அவசரமின்றி விளைச்சலை அரசு மையங்களில் ஒப்படை த்து முழுமையான பலனை அடைய இது ஒரு மிக்கப்பெய வாய்ப்பாக அமைந்துள்ளது. மேலும் இதில் புரோக்கர்கள் தலையீடும் இருக்காது என்பதால், இதற்கான பணத்தையும் விவசாயிகள் நேரடியாக பெற முடியும்.




## ஒட்டன்சத்திரத்தில் அன்னதானம் வழங்கும் விழா!

ஒட்டன்சத்திரம், பிப். 02–

திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் வட்டாட்சியர் அலுவலகம் பிரிவு அருகில் சர்வேஷ் பல் மருத்துவமனை மற்றும் ஜெ.பி.எஸ் பத்திரம் எழுதும் நிறுவனம் சார்பில் பழனி பாதையாத்திரை செல்லும் பக்தர்களுக்கு 2 – வது ஆண்டாக அன்ன தானம் வழங்கும் விழா நடைபெற்றது.

ஜெ.பி.எஸ் பத்திரம் எழுதும் நிறுவனம் ஜெ.பி.எஸ் சக்தீஸ்குமார், வி.பிரியத ர்ஷினி சார்பாகவும், கள்ளி மந்தையம் ஜெ.பி.எஸ் செல்வராஜ் – சுப்புலட்சுமி குடும்பத்தார்கள் மற்றும் ஒட்டன்சத்திரம் சர்வேஸ் பல் மருத்துவமனை டாக்டர் எஸ்.அஸ்வினி, தென்னக இரயில்வே ஏ.இ. ஜெ.பி.எஸ் சரவணக்குமார் குடும்பத் தார்கள்;, மாஸ்டர்கள் எஸ்.சர்வேஸ், எஸ்.சர்வந்ஜெய் சார்பாகவும் பழனி பாதையாத்திரை பக்தர்கள் சுமார் 3000 பேருக்கு அன்னதானம் வழங்க ப்பட்டது. இவ்விழாவில் ஒட்டன்சத்திரம் நகர் மன்ற தலைவர் க.திருமலைசாமி, வெரியப்பூர் கருப்புச்சாமி, தங்கச்சியம்மாபட்டி ஆறுமுகம், சமூக ஆர்வ லர்கள் ஆ.இளங்கோவன், எம்.விஜய்கார்த்திக், மதுரை மணி சே.சதீல்குமார், தமிழ்சுடர் ஆறுமுகம் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.



## பிப்ரவரி மாத ராசி பலன் 2026: 12 ராசிகளுக்கான தனி தனி ராசி பலன்கள்!




ஜோதிடத்தின் படி, பிப்ரவரி 2026 மாதம் மிகவும் முக்கியம் வாய்ந்ததாக கருதப்படுகிறது. ஏனெனில் குறிப்பாக, சனியின் ராசியான கும்பத்தில் ராகு, சூரியன், செவ்வாய், புதன் மற்றும் சுக்கிரன் ஆகியோரின் வருகை, சூரியன், செவ்வாய், புதன் மற்றும் சுக்கிரன் ஆகிய கிரகங்களுடன் சேர்ந்து, பல நல்ல மற்றும் அசுப சேர்க்கை களை உருவாக்கும், இது அனைத்து ராசிக்காரர்களையும் பாதிக்கும். இப்படி பல கிரகங்கள் கும்ப ராசியில் கூடக் கூடிய நிலை உருவாகிறது.

இந்நிலையில் பிப்ரவரி 2026க்கான மாதாந்திர இந்த கிரகப் பெயர்ச்சிகளின் அடிப்படையில் 12 ராசிகளின் வாழ்க்கை எவ்வாறு பாதிக்கப்படும் என்பதை தெரிந்துக்கொள்வோம்.

### மேஷம்

மேஷ ராசிக்காரர்களுக்கு பிப்ரவரி மாதம் சிறப்பாக இருக்கும். உடல்நலம் ரீதியாக, நீங்கள் சுறுசுறுப்பாக இருப்பீர்கள், ஆனால் அவசரமும் அதிக வேலைப்பளுவும் தலைவலி அல்லது சோர்வுக்கு வழிவகுக்கும். நிதி விஷயங்களில் புதிய வருமான வழிகள் திறக்கப்படலாம், இருப்பினும் செலவுகள் தொடர்ந்து அதிகரிக்கும். வேலையில், உங்கள் முடிவெடுக்கும் வேகமும் தலை மைத்துவ பாணியும் மற்றவர்களைக் கவரும், இதனால் உங்கள் கருத்துக்கள் மிகவும் முக்கியமானதாக மாறும். தொழில் மற்றும் போட்டித் தேர்வுகளுக்குத் தயாராகி வருபவர்கள், குறிப்பாக மாதத்தின் இறுதி நாட்களில், அதிகரித்த தன்னம்பிக்கையால் பயனடைவார்கள்.

### ரிஷபம்

ரிஷப ராசிக்காரர்களுக்கு, பிப்ரவரி மாதம் நிலைத்தன்மையையும் நடைமுறை முடிவுகளையும் குறிக்கிறது. உடல்நலம் சாதாரணமாக இருக்கும், ஆனால் உணவுப் பழக்கத்தில் கவனக்குறைவு வயிற்றுப் பிரச்சினைகளை ஏற்படுத்தக்கூடும். செல்வம் பெருகும். பழைய சேமிப்புகள் கைக்கு வரும், மேலும் தேங்கி நிற்கும் பணத்தை மீட்டெடுக்கும் வாய்ப்பு உள்ளது. வேலையில் முன்னேற்றம் மெதுவாக இருக்கலாம், உங்கள் நிலையான அணுகுமுறை நீண்ட காலத்திற்கு நல்ல பலன்களைத் தரும், மேலும் உங்கள் கடின உழைப்பின் பலன்கள் தெளிவாகத் தெரியும். காதல் வாழ்க்கையில் உணர்ச்சிப்பூர்வமான பாதுகாப்பு உணர்வு அதிகரிக்கும்.

### மிதுனம்

பிப்ரவரி மாதம் மிதுன ராசிக்காரர்களுக்கு மன ரீதியாக சுறுசுறுப்பும் மாற்றமும் நிறைந்த மாதமாக இருக்கும். மன அழுத்தம் மற்றும் தூக்கமின்மை உடல்நலப் பிரச்சினைகளை ஏற்படுத்தக்கூடும். எதிர்பாராத லாபங்கள் மற்றும் திட்டமிடப்படாத செலவுகளுடன் நிதி நிலைமைகள் நிலையற்றதாக இருக்கலாம். வேலையில் புதிய பொறுப்புகள் எழும், இது கற்றல் வாய்ப்புகளை வழங்கும், ஆனால் அழுத்தத்தையும் அதிகரிக்கும். தொழில் மற்றும் போட்டித் தேர்வுகளில் வெற்றி பெறுவதற்கு மிகுந்த கவனம் தேவைப்படும். காதல் வாழ்க்கையில் குழப்பம் ஏற்படலாம்.

### கடகம்

பிப்ரவரி மாதம் கடக ராசிக்காரர்களின் உணர்ச்சி சமநிலையை சோதிக்கும். ஆரோ க்கியம் படிப்படியாக மேம்படும், ஆனால் மன உணர்திறன் நிலைத்திருக்கும். வீட்டுச் செலவுகள் அதிகரிக்கக்கூடும் என்றாலும், நிதித் துறையில் வருமானம் நிலையானதாக இருக்கும். வேலையில் சக ஊழியர்களி டமிருந்து உங்களுக்கு ஆதரவு கிடைக்கும், மேலும் பணிச்சூழல் நேர்மறை யாக இரு க்கும். தொழில் மற்றும் போட்டித் தேர்வுகளு க்குத் தயாராகி வருபவர்கள் பொறுமை மற்றும் நிலையான பயிற்சியால் பயனடைவார்கள்.

### சிம்மம்

சிம்ம ராசிக்கு, பிப்ரவரி மாதம் தன்ன ம்பிக்கை மற்றும் கௌரவம் அதிகரிப்பதைக் குறிக்கிறது. ஆரோக்கியம் நன்றாக இருக்கும், ஆனால் இதயம் மற்றும் கண்களைப் பொறுத்தவரை எச்சரிக்கை அவசியம். நிதி நிலைமைகள் வலுவடையும், மேலும் பண ஆதாயங்கள் கௌரவங்கள் அல்லது சாதனைகள் வடிவில் கிடைக்கும். வேலையில் அங்கீகாரம் கிடைக்கும், மேலும் நீங்கள் தலைமைத்துவ வாய்ப்புகளைப் பெறுவீர்கள். தொழில் மற்றும் போட்டித் தேர்வுகளில் வெற்றி வலுவாகக் குறிக்கப்படு கிறது, குறிப்பாக நிர்வாக அல்லது மேலாண்மைத் துறைகளில்.

### கன்னி

பிப்ரவரி மாதம் கன்னி ராசிக்காரர்களுக்கு வேலைப்பளு மற்றும் பொறுப்புகளால் நிறைந்திருக்கும். உடல்நலம், குறிப்பாக வயிறு மற்றும் தோல் தொடர்பான பிரச்சினைகள் ஏற்ற இறக்கமாக இருக்கும். பணம் மற்றும் சொத்துக்களை கையாளும் போது எச்சரிக்கை அவசியம்; தேவையற்ற செலவுகளைத் தவிர்க்கவும். ஒழுக்கம் மற்றும் திட்டமிடல் வேலை மற்றும் வணிகத்தில் வெற்றியைத் தரும். தொழில் மற்றும் போட்டித் தேர்வுகளுக்கு கடின உழைப்பு தேவைப்படும்.

### துலாம்

பிப்ரவரி மாதம் துலாம் ராசிக்காரர்களுக்கு சமநிலையையும் நல்லிணக்கத்தையும் தரும். ஆரோக்கியம் சாதாரணமாக இருக்கும், ஆனால் உங்கள் முதுகு மற்றும் சிறுநீரகங்களைப் பொறுத்தவரை எச்சரிக்கை அவசியம். நிதி விஷயங்களில் கூட்டாண்மை கள் நன்மைகளைத் தரும் மற்றும் உங்கள் நிதி நிலைமையை வலுப்படுத்தும். கலை, சட்டம் மற்றும் படைப்புத் துறைகளில் ஈடுபடுபவர்கள் தொழில் மற்றும் போட்டித் தேர்வுகளில் சிறப்பு நன்மைகளைக் காண்பார்கள். காதல் வாழ்க்கை இனிமையாக மாறும். உங்கள் குழந்தைகளின் படைப்புத் திறமைகள் வெளிப்படும்.

### விருச்சிகம்

விருச்சிக ராசிக்காரர்களுக்கு, பிப்ரவரி மாதம் ஆழ்ந்த சிந்தனை மற்றும் உள் மாற்றத்திற்கான காலமாகும். மன அழுத்தம் மற்றும் மறைக்கப்பட்ட நோய்கள் குறித்து எச்சரிக்கையாக இருங்கள். உத்தி மற்றும் ரகசியத்தன்மை வேலை மற்றும் வணிகத்தில் வெற்றியைத் தரும். உங்கள் காதல் வாழ்க்கையில் உணர்ச்சிகள் தீவிரமாக இருக்கும், எனவே சந்தேகத்தைத் தவிர்ப்பது முக்கியம். பயண வாய்ப்புகள் எதிர்பாராத விதமாக எழக்கூடும்.

### தனுசு

பிப்ரவரி மாதம் தனுசு ராசிக்காரர்களுக்கு விரிவாக்கம் மற்றும் வாய்ப்புகளின் மாதமாக இருக்கும். உடல்நலம் நன்றாக இருக்கும், ஆனால் பயணம் சோர்வை ஏற்படுத்தக்கூடும். செல்வம் அதிகரிக்கும். புதிய நபர்களுடனான தொடர்புகள் மற்றும் புதிய வாய்ப்புகள் உங்கள் எல்லைகளை விரிவுபடுத்த உதவும். உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சியில் ஈடுபடுபவர்கள் தொழில் மற்றும் போட்டித் தேர்வுகளில் வெற்றியைக் காண்பார்கள்.

### மகரம்

மகர ராசிக்காரர்களுக்கு, பிப்ரவரி மாதம் கடின உழைப்பு மற்றும் பொறுப்புணர்வு நிறைந்த காலமாகும் இருக்கும். எலும்புகள் மற்றும் மூட்டுகள் தொடர்பான உடல்நலப் பிரச்சினைகள் ஏற்படலாம். செல்வம் நிலைபெறும், சொத்து தொடர்பான வாய்ப்புகள் உருவாகும். அரசு அல்லது நிர்வாகத் துறைகளில் ஈடுபடுபவர்கள் தொழில் மற்றும் போட்டித் தேர்வுகளில் பயனடைவார்கள். காதல் வாழ்க்கையில் உணர்ச்சிகளை வெளிப்படுத்துவதில் தயக்கம் காட்டுவார்கள்.

### கும்பம்

கும்ப ராசிக்காரர்களுக்கு பிப்ரவரி மாதம் புதுமை மற்றும் புதிய சிந்தனையைக் குறிக்கிறது. ஆரோக்கியம் சாதாரணமாக இருக்கும், ஆனால் இரத்த ஓட்டத்தில் எச்சரிக்கை அவசியம். புதிய யோசனைகள் மற்றும் தொழில்நுட்பம் நிதி நன்மைகளைத் தரும். பாரம்பரிய சிந்தனைக்கு அப்பால் பரிசோதனை செய்வது உங்களுக்கு புதிய வழிகளைத் திறக்கும். அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் ஆராய்ச்சியில் இருப்பவர்கள் முன்னேற வாய்ப்புகள் கிடைக்கும். நட்பு காதலாக மலரக்கூடும்.

### மீனம்

மீன ராசிக்காரர்களுக்கு பிப்ரவரி மாதம் உணர்ச்சி மற்றும் ஆன்மீக அனுபவங்களால் நிறைந்திருக்கும். மன உணர்திறன் அதிகரிக்கும். செல்வம் படிப்படியாக மேம்படும், ஆனால் செலவுகளைக் கட்டுப்படு த்துவது அவசியம். கலை, உளவியல் மற்றும் ஆன்மீகத் துறைகளில் ஈடுபடுபவர்கள் பயனடைவார்கள். உங்கள் காதல் வாழ்க்கை யில் காதல் மற்றும் உணர்ச்சி ரீதியான தொடர்பு ஆழமடையும். உங்கள் குழந்தைகள் உங்களுக்கு உணர்வு ரீதியாக நெருக்கமாக இருப்பார்கள்.

**(பொறுப்பு துறப்பு:** இதில் இடம்பெற்றுள்ள தகவல்கள் பொதுவானவை ஆகும். பல்வேறு ஊடகங்கள், ஜோதிடர்கள், பஞ்சாங்கம், நம்பிக்கைகளின் அடிப்படையில் எழுதப்பட்டவை. இதற்கு மதுரை மணி நாளிதழ் பொறுப்பேற்காது.)




## வெறும் வயிற்றில் சுடு தண்ணீர் குடிப்பதால் 'இந்த' மேஜிக்



காலையில் எழுந்த பின்பு, வெறும் வயிற்றில் தண்ணீர் குடிப்பது என்பது பலரது பழக்கமாக இருக்கும். இப்படி செய்தால்தான் அவர்களுக்கு காலைக்கடன்களை முடித்தது போல தோன்றும். அப்படி குடிப்பதால் உங்கள் உடலுக்குள் என்ன நடக்கும் தெரியுமா?

**காலையில் எழுந்ததும் வெந்நீர் குடிப்பது..**

காலையில் வெறும் வயிற்றில் வெந்நீர் குடிப்பதால் உடல் செரிமானம் தூண்டப்படுகிறது. இது உடல் நச்சுகளை வெளியேற்றி, உடலை சுத்தப்படுத்துவதோடு வளர்சிதை மாற்றத்தை அதிகரிக்கிறது. அது மட்டுமன்றி, ரத்த ஓட்டத்தை மேம்படுத்தி, ரத்த நாளங்களை விரிவடைய செய்யும். மேலும், மலக்குடலை மென்மையாக்கி குடல் தசைகளை மிருதுவாக்குகிறது. இது, உங்கள் உடலை அன்றைய தினத்திற்கு தயார் படுத்துகிறது. இதைத்தாண்டி, உடலுக்கு தேவையான நீரேற்றத்தையும் இது அளிக்கிறது. அலைச்சல் இல்லாமல், உங்கள் உடலை ரிலாக்ஸ் ஆக்கி, ஆற்றலையும் அதிகரிக்கிறது.

செரிமான பிரச்சனை..

காலையில் வெறும் வயிற்றில் தண்ணீர் குடிப்பது செரிமானத்திற்கு உதவுகிறது. இது, குடல் அசைவுகளை தூண்டி உணவு சீராக செரிமானம் ஆக உதவுகிறது. இது, கொழுப்புகளை கரைக்கவும், அஜீரண கோளாற்றினை தவிர்க்கவும் உதவுகிறது. வயிறு உப்பசத்தை தவிர்க்க, வெறும் வயிற்றில் காலையில் தண்ணீர் குடிக்கலாம். இது, குடல் தசைகளின் சுருக்கங்களை விரைவுப்படுத்தி, மலம் கழிப்பதை எளிதாக்குகிறது.

டீடாக்ஸிபிகேஷன் மற்றும் மெட்டபாலிசம்:

ஓரிரவில் உங்கள் வயிற்றில் குவிந்த நச்சுகளை நீக்க, கழிவு பொருட்களை அகற்ற மற்றும் குடலை சுத்தப்படுத்த காலையில் வெறும் வயிற்றில் சுடு தண்ணீர் குடிக்கலாம். இது, வளர்சிதை மாற்றத்தை அதிகரித்து, கலோரி எரிப்பை அதிகரிக்கும். மேலும், உடல் எடை மேலாண்மைக்கும் உதவுகிறது.

ரத்த ஓட்டம்:

ரத்த ஓட்டத்தை மேம்படுத்த, ரத்த நாளங்களை விரிவடைய செய்ய ஆக்சிஜன் வினியோகத்தை மேம்படுத்த இது உதவுகிறது. உடலை தததகப்பாக்கவும், உள்ளிருந்து சூடேற்றவும் காலையில் வெந்நீரை குடிக்கலாம்.

தசைப்பிடிப்புகள், நெஞ்செரிச்சல் மற்றும் மனநலனை சீராக்கவும் சுடு நீரை குடிக்கலாம். இது, தூக்கத்திற்கு பின்பு திசுக்களை மாற்றி உடலுக்கு நீரேற்றம் அளிக்கிறது. மேலும், நரம்பு மண்டலத்தையும் அமைதி படுத்துகிறது.

உடலில், நீர்ச்சத்து குறையும் போது சோர்வு, தூக்கமின்மை போன்ற பிரச்சனைகள் வரும். இதை சரிசெய்ய உடலில் சரியாக நீரேற்றம் இருப்பது அவசியம். இதை சரி செய்வதற்கு நாம் வெந்நீரை அருந்தலாம். இதனால், மனநலனும் மேம்படும்.

**எப்படி குடிப்பது?**

காலையில் வெறும் வயிற்றில், 1–4 கோப்பை, வெதுவெதுப்பான நீரை குடிக்க வேண்டும். உங்கள் நாக்கு சுடுநீரால் சுட்டுவிடாமல் இருக்குமாறு பார்த்துக்கொள்ளுங்கள். வெறும் வெந்நீரை மட்டும் குடிப்பது உங்களுக்கு போதவில்லை என்று தோன்றினால், அதில் ஒரு சில நாட்களில் தேன் மற்றும் எலுமிச்சை பிழிந்து குடிக்கலாம். இதை தாண்டி சீரகம் கலந்த தண்ணீரையும் குடிப்பது நல்ல டீ–டாக்ஸ் ஆக உதவும்.

(பொறுப்பு துறப்பு: இந்தச் செய்தி உங்களுக்கு பல தகவல்களை வழங்குவதற்காக மட்டுமே எழுதப்பட்டுள்ளது. இதை எழுதுவதில் வீட்டு வைத்தியம் மற்றும் பொதுவான தகவல்களின் உதவியை நாங்கள் பெற்றுள்ளோம். இவற்றை பின்பற்றுவதற்கு முன் கண்டிப்பாக மருத்துவ ஆலோசனையைப் பெற வேண்டும். மதுரை மணி நாளிதழ் இந்த தகவல்களை உறுதிப்படுத்தவில்லை.)

## பள்ளி மாணவர்களே கவனம்! பிப்ரவரியில் எத்தனை நாட்கள் விடுமுறை?




சென்னை, பிப். 02–

பிப்ரவரி மாதத்தில் மொத்தமாக நான்கு ஞாயிற்றுக்கிழமைகள் மற்றும் நான்கு சனிக்கிழமைகள் வருவதால் மொத்தம் எட்டு நாட்கள் பள்ளி மாணவர்களுக்கு விடுமுறை கிடைக்கும். இது ஜனவரி மாதத்துடன் ஒப்படைகையில் மிகவும் குறைவு தான். ஒரு சில உள்ளூர் விடுமுறைகள் தவிர மாநிலம் முழுவதும் பிப்ரவரி மாதத்தில் விடுமுறை கிடைப்பது கடினமே. இருப்பினும் மார்ச் மாதத்தில் பொது தேர்வுகள் தொடங்கும் என்பதால் பிப்ரவரி மாதத்தில் விடுமுறைகள் இல்லாமல் இருப்பதும் மாணவர்களுக்கு ஒரு விதத்தில் நல்லதே. இதன் மூலம் பொதுத்தேர்வுகளுக்கு மாணவர்கள் முழுமையாக தயாராக முடியும்.

## பாஸ்போர்ட் புது அப்டேட்! 2026-ல் வந்த புது ரூல்ஸ்?




டெல்லி, பிப். 02–

2026ல், பாஸ்போர்ட்டில் பலவிதமான புதுப்புது மாற்றங்கள் கொண்டு வரப்பட்டுள்ளன. இவற்றை, நாடு விட்டு நாடு பயணம் செய்யும் இந்தியர்கள் கண்டிப்பாக தெரிந்துகொள்ள வேண்டும். நீங்கள் புதிதாக பாஸ்போர்ட் அப்ளை செய்ய வேண்டும் என்றாலும்,, பழைய பாஸ்போர்டை புதுப்பிக்க வேண்டும் என்றாலும் இதை தெரிந்து வைத்துக்கொள்வது கட்டாயம் ஆகும். அரசு, இந்த மாற்றங்களை ஏற்படு த்த பாதுகாப்பு காரணங்கள், விண்ணப்பங்களின் தவறுகளை சரி செய்வது உள்ளிட்ட காரணங்களுக்காக கொண்டு வந்துள்ளது. இங்கு, என்னென்ன மாற்றங்கள் ஏற்படுகிறது என்பதை எளிதாக புரிந்து கொள்ளும் வகையில் இந்த பதிவு விவரிக்கிறது.

**டிஜிட்டல்:**

இந்தியாவில் பல்வேறு முக்கிய விஷயங்கள் டிஜிட்டல் மயமாக்கப்பட்டு விட்டன. இதையடுத்து, பாஸ்போர்டிலும் இதே முறை அணுகப்படுகிறது. விண்ணப்பத்தை சமர்ப்பித்தல், விண்ணப்பத்தை புக்கிங் செய்தல், உங்கள் விண்ணப்பத்தை சரி பார்த்தல் என அனைத்தும் ஆன்லைன் மயமாக்கப்பட்டுள்ளது. நேரில் செய்யும் வேலைகள் கணிசமாக குறைக்கப்பட்டுள்ளது. இது, நேரத்தை மிச்சப்படுத்துவதோடு, மனித தவறுகளையும் குறைக்கிறது. இருப்பினும், விண்ணப்பதாரர்கள் சரியாக விண்ணப்பங்களை முழுமை செய்ய வேண்டும்.

**சான்றிதழ்கள்:**

சான்றிதழ்களை சரிபார்த்தல் முன்பை விட இப்போது இன்னும் கடுமையாக்கப்பட்டுள்ளன. அனைத்து சான்றிதழ்களும் உண்மையாக மற்றும் சரியாக இருந்தால் மட்டுமே விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். ஆதார் கார்ட் சரிபார்த்தல், டிஜிட்டல் பிறப்பு சான்றிதழ், முகவரி சான்று போன்றவை கண்டிப்பாக இருந்தே ஆக வேண்டும். பெயரில் ஏதாவது பிரச்சனை, பிறப்பு தேதி அல்லது முகவரியில் ஏதேனும் மாறுதல்கள் இருந்தால் அது தாமதத்திற்கு வழிவகுக்கும். ஸ்கேன் செய்யும் போது சரியான புகைப்படத்தை பதிவிடாதது கூட விண்ணப்பம் நிராகரிக்கப்பட காரணமாக அமையும்.

**வலிமையான அடையாள சரிபார்ப்பு:**

2026ஆம் ஆண்டில், பாஸ்போர்டிற்கான அடையாள சரிபார்ப்பு மேம்படுத்தப்பட்டுள்ளது. மோசடி மற்றும் நகல்களை தவிர்க்க, அரசாங்க தளர்வுகளற்ற சரிபார்ப்பு நடைமுறைய கொண்டு வந்துள்ளது. சிறிய எழுத்து ப்பிழை, சான்றுகளுக்கு இடையேயான வேறுபாடுகள், தனிப்பட்ட விவரங்களை தனியாக கொடுத்திருத்தல் உள்ளிட்டவை இருந்தால், அந்த விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.

**காவல்துறை சரிபார்ப்பு:**

பொதுவாக பாஸ்போர்ட் விண்ணப்பிக்கும் போது காவல்துறை தரப்பில் இருந்து சரிபார்க்கப்படும். இது, 2026க்கு முன் தாமதப்படுத்தப்பட்டு வந்தது. இப்போது டிஜிட்டல் முறையிலேயே காவல் சரிபார்ப்பு நடக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. உங்கள் வீட்டிற்கு அருகில் இருக்கும் காவல் நிலையத்திற்கு மெசேஜ் மூலமாக சரிபார்ப்புக்கான தகவல் பகிரப்படுவதால், இந்த ப்ராசஸ் சீக்கிரமாக முடியும்.

**செயலாக்க காலக்கெடு:**

செயலாக்க காலக்கெடு இப்போது முன்பை விட தெளிவாக உள்ளது. இதனால் விண்ணப்பதாரர்களுக்கு ஒரு பெரிய நிவாரணம் என கூறப்படுகிறது. தக்கல் பாஸ்போர்ட் அல்லது எப்போதும் விண்ணப்பிக்கப்படும் பாஸ்போர்ட் என அனைத்திற்கான காலக்கெடு மற்றும் கடைசி தேதி ஆகியவை தெளிவாக காண்பிக்கப்படுகின்றன.

**இளம் வயதினருக்கான பாஸ்போர்ட்:**

18 வயது மிகாதவர்களுக்கான விதிமுறைகளில் பல்வேறு மாற்றங்கள் கொண்டு வரப்பட்டுள்ளன. அதாவது, குழந்தைக்கு பாஸ்போர்ட் விண்ணப்பிக்கிறோம் என்றால், அவர்களின் பெற்றோர் அல்லது சட்டரீதியான பாதுகாவலரிடம் இருந்து சம்மதமானது தேவைப்படுகிறது. ஒரு சில நேரங்களில், அந்த வயது வராதோர் ஒரே ஒரு பெற்றோரால் வளர்க்கப்படும் பட்சத்தில், இன்னும் சில உறுதி ஆவணங்கள் தேவைப்படுகிறது.

**புதுப்பித்தல்:**

2026ல் பாஸ்போர்ட் புதுப்பித்தல் எளிமையாக்கப்பட்டுள்ளது. குறிப்பாக, தனிப்பட்ட விவர ங்களில் பெரிய மாற்றங்கள் இல்லாத விண்ணப்பதா ரர்களுக்கு இது நல்ல செய்தியாகும். இதனால் நேரம் மிச்சமாவதுடன், ஆன்லைனிலேயே அலைச்சல் இல்லாமல் அனைத்தையும் முடித்து விடலாம்.

## வேலை வாய்ப்பு

## இந்திய தபால் துறையில் 2019 காலியிடங்கள்




Organization Name: Tamil Nadu Post Office
Notification No: 17–37/2025–GDS (Pt.I)
Job Category: Central Govt Jobs
Total No of Vacancies: 2019 Gramin Dak Sevaks (GDSs) [i.e. Branch Postmaster/Assistant Branch Postmaster/Dak Sevaks] Posts
Place of Posting: Tamilnadu
Starting Date: 02.02.2026
Last Date: 16.02.2026
Apply Mode: Online
Official Website: https://indiapost.gov.in/gdsonlineengagement

## ராமநாதபுரத்தில் தானம் அறக்கட்டளை சார்பில் 'வாக்கத்தான் 2026' நிகழ்ச்சி!





ராமநாதபுரம், பிப். 02–

ராமநாதபுரத்தில் தானம் அறக்கட்டளை சார்பில் 'வாக்கத்தான் 2026' நிகழ்வு பழைய பேருந்து நிலையத்தில் தொடங்கி, குமரய்யா கோவில் அருகே உள்ள தாஜ் பேலஸ் தனியார் திருமண மஹாலில் நிறைவடைந்தது. இந்நிகழ்வை கனரா வங்கி முதன்மை மேலாளர் பிரம்மராஜு கொடி அசைத்து தொடங்கி வைத்தார்.நிலையான நிதி சேர்க்கை' வங்கி சேவைகளின் முக்கியத்துவம் மற்றும் காப்பீட்டின் அவசியம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் அமைந்தது. இந்த நிகழ்வில் ராமநாதபுரம் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து சுமார் 800–க்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். சிறப்பு விருந்தினராக மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் கார்த்திகேயன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.தானம் அறக்கட்டளையின் மண்டல ஒருங்கிணைப்பாளர் கே. செல்வ பாண்டியன் ஏற்படுகள் செய்திருந்தார்.

## அன்புமணிக்கு எதிராக ராமதாஸ் தொடர்ந்த வழக்கில் தேர்தல் ஆணையம் 3 வாரத்தில் பதிலளிக்க உயர்நீதிமன்றம் உத்தரவு!

சென்னை, பிப். 02–

அன்புமணிக்கு எதிராக ராமதாஸ் தொடர்ந்த வழக்கில்



தேர்தல் ஆணையம் 3 வாரத்தில் பதிலளிக்க சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. அன்புமணிக்கு மாம்பழம் சின்னம் ஒதுக்கி தேர்தல் ஆணையம் அனுப்பிய கடிதத்தை ரத்து செய்யக் கோரி ராமதாஸ் வழக்கு தொடுத்துள்ளார். தனது முகவரிக்கு தேர்தல் ஆணையம் கடிதம் அனுப்ப உத்தரவிடக் கோரி ராமதாஸ் மனுவில் குறிப்பிட்டுள்ளார். வழக்கு விசாரணையின் போது, எதிர் தரப்பினராக இல்லாதபோது வாதிட அனுமதிக்க முடியாது என அன்புமணி தரப்பு வழக்கறிஞருக்கு நீதிபதிகள் அனுமதி மறுத்துவிட்டனர்.

## பழனி முருகனுக்கு காவடி எடுத்த அண்ணாமலை!



பழனி, பிப். 02–

உலக புகழ் பெற்ற பழனி முருகன் கோவிலில் தைப்பூச திருவிழா கடந்த 26–ந்தேதி பெரியநாயகி அம்மன் கோவிலில் கொடியேற்றத்துடன் தொடங்கியது. விழாவின் சிகர நிகழ்ச்சியான தேரோட்டம் நேற்று மாலை 4.30 மணிக்கு நடைபெற்றது. தேரோட்டத்தை காணவும், வடம் பிடித்து தேரை இழுக்கவும் தமிழகம் முழுவதும் இருந்து பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் பழனியில் குவிந்தனர். தைப்பூச திருவிழாவையொட்டி தமிழக பா.ஜனதா முன்னாள் மாநிலத் தலைவர் அண்ணாமலை சாமி தரிசனம் செய்ய பழனி வந்தார். திருஆவினன்குடி கோவிலில் காவடி எடுத்து வழிபட்ட அவர் படிப்பாதை வழியாக மலைக்கோவில் சென்று தரிசனம் செய்தார்.



பழனி தைப்பூசம் திருத்தேரோட்ட விழாவில், ஐபி.செந்தில்குமார் எம்எல்ஏ, திண்டுக்கல் கலெக்டர் சரவணன், கோவில் நிர்வாக அதிகாரி மாரிமுத்து, அறங்காவலர் குழு தலைவர் சுப்பிரமணியன், அறங்காவலர்கள் தனசேகர், பாலசுப்ரமணி, பாலசுப்பிரமணியம், அன்னபூரணி, பிஜேபி திருமலைசாமி, பில்டிங் காண்ட்ராக்டர் நேரு, அரிமா சுந்தரம், சாய் கிருஷ்ணா மருத்துவமனை சுப்புராஜ், காணியாளர் நரேந்திரன், பி.பிரணவ், சூப்பர் முத்துக்குமார் ஆகியோர் உள்ளனர்.

## ஆண்டிபட்டி தி லிட்டில் பிளவர் பள்ளியின் 21-வது விளையாட்டு விழா!

ஆண்டிபட்டி, பிப். 02–

ஆண்டிபட்டி தி லிட்டில் பிளவர் பள்ளியின் 21–வது ஆண்டு விளையாட்டு விழா கோலாகலமாக நடைபெற்றது. இதில் மாவட்ட காவல்துறை துணை கண்காணிப்பாளர் சிவசுப்பு கலந்துகொண்டு சிறப்பித்தார்.

தேனி மாவட்டம், ஆண்டிபட்டியிலுள்ள தி லிட்டில் பிளவர் பள்ளியின் விளையாட்டு விழா பள்ளி மைதானத்தில் நடைபெற்றது. இவ்விழாவிற்கு தேனி மாவட்ட காவல்துறை துணை கண்காணிப்பாளர் சிவசுப்பு தலைமை தாங்கி உரையாற்றினார். அப்போது அவர், மாணவர்களின் எதிர்கால வளர்ச்சிக்கு கல்வியுடன் கூடிய விளையாட்டுத் திறனும் மிக அவசியம் என்று குறிப்பிட்டார். சிறப்பு அழைப்பாளர்களாக மதுரை தீயணைப்புத்துறை மண்டல இயக்குனர் ராஜேஷ் கண்ணன் மற்றும் தேனி மாவட்ட தீயணைப்புத்துறை அலுவலர் ஜெகதீஷ் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர். முன்னதாக, விருந்தினர்கள் மூவரும் மாணவர்களின் கண்கவர் கொடி அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டனர். பின்னர், வான்நோக்கி வண்ண பலூன்களைப் பறக்கவிட்டு விளையாட்டுப் போட்டிகளை அதிகாரப்பூர்வமாகத் துவக்கி வைத்தனர். விழாவில் மாணவர்களின் கூட்டு உடற்பயிற்சி பெற்றோர்களைக் கவரும் வண்ணம் மிகச்சிறப்பாக அமைந்திருந்தது. தொடர்ந்து நடைபெற்ற பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்குப் பதக்கங்கள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.



இவ்விழாவில் பள்ளியின் நிர்வாக கமிட்டி உறுப்பினர்கள் தமயந்தி, மேத்யூ ஜோயல் மற்றும் பள்ளித் தாளாளர் ஹென்றி ஆகியோர் முன்னிலை வகித்து விழாவை சிறப்பித்தனர்.

விளையாட்டு விழாவிற்கான ஏற்பாடுகளைப் பள்ளி முதல்வர்கள் உமாமகேஸ்வரி, லதா ஆகியோர் தலைமையில், ஒருங்கிணைப்பாளர்கள் பூமா, கவிதா, ராகினி, பாண்டிச்செல்வி, தமிழ்செல்வி, பாப்பம்மாள், ஜான்சி, பானுபிரியா, தெய்வ நிரஞ்சனா மற்றும் கல்பனாதேவி ஆகியோர் செய்திருந்தனர். பள்ளி உடற்பயிற்சி ஆசிரியர் பிரேம்குமார் ஒட்டுமொத்த நிகழ்வுகளையும் ஒருங்கிணைத்தார். இதில் ஏராளமான பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.



பழனி முருகன் கோவிலில் முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் அவர்கள் சாமி தரிசனம் செய்தார்.



பழனி தைப்பூசம் திருவிழாவையொட்டி, தமிழக வெற்றி கழகம் சார்பில், பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது. இதில் பழனி பாலன் அன்னதானம் வழங்கினார். சிவா மற்றும் நிர்வாகிகள் பங்கேற்றனர்.




இஸ்மாயில் லக்கி டிராவல்ஸ்
127, T.P.K.ரோடு, மதுரை.
Ph: 98659 88882
மதுரை to சென்னை ரெகுலர் சர்வீஸ்
பஸ் மற்றும் பார்சல் சர்வீஸ் உள்ளது
சென்னை
Ph: 98659 88881




பழனி தைப்பூசம் திருவிழாவையொட்டி சைக்கிள் ரெடிமேட் வியாபாரிகள் நல சங்கம் சார்பில் அன்னதானம் நடைபெற்றது. இதில் முன்னாள் எம்எல்ஏ வேணுகோபால், அதிமுக நகர செயலாளர் முருகானந்தம், மாவட்ட வர்த்தக அணி தலைவர் பாலகிருஷ்ணன் உள்ளனர்




# தி.மு.க. கூட்டணி பேச்சுவார்த்தை குழு - விரைவில் அறிவிப்பு வெளியாக வாய்ப்பு!

சென்னை, பிப். 02–

தமிழகத்தில் அரசியல் கட்சிகள் சட்டமன்ற தேர்தலுக்கு தயாராகி வருகிறார்கள். ஆட்சியை தக்க வைப்பதற்கு தி.மு.க. கூட்டணியும், ஆட்சியை பிடிப்பதற்கு அ.தி.மு.க. – பா.ஜ.க. கூட்டணியும் தீவிரம் காட்டி வருகின்றன.




ஆளுங்கட்சியான தி.மு.க. கூட்டணி கட்சியினருடன் தொகுதி பங்கீடு தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்த பொருளாளர் டி.ஆர்.பாலு தலைமையில் குழு அமைக்கப்பட உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

தி.மு.க. கூட்டணி பேச்சுவார்த்தை குழு தொடர்பான அறிவிப்பு நாளை வெளியாக வாய்ப்பு உள்ளது. ஒவ்வொரு கட்சியினருடனும் இந்த குழு பேச்சுவார்த்தை நடத்த உள்ளது. காங்கிரஸ், வி.சி.க., கம்யூனிஸ்ட் உள்ளிட்ட கட்சிகளுடன் விரைவில் பேச்சு நடத்தப்பட வாய்ப்பு உள்ளது. கூட்டணி தொகுதி பங்கீட்டை விரைவில் முடிக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்த மாத இறுதிக்குள் தொகுதி பங்கீட்டை இறுதி செய்து பிரசாரத்தை தொடங்க கூட்டணி கட்சிகள் திட்டமிட்டுள்ளன.

கூட்டணியில் இணைய தே.மு.தி.க. விருப்பம் தெரிவித்து வருவதாக தகவல் வெளியாகி உள்ளது.

# திருச்சியில் 21-ந் தேதி நடைபெறும் நாதக மாநாட்டில் 234 வேட்பாளர்கள் அறிவிப்பு!

சென்னை, பிப். 02–

திரைப்பட இயக்குனரும், நடிகருமான சீமான், கடந்த 2010–ம் ஆண்டு மே மாதம் 18–ந் தேதி நாம் தமிழர் கட்சியை தொடங்கினார். 2016–ம் ஆண்டு முதல் தேர்தலை சந்தித்து வரும் இந்தக் கட்சி, அனைத்து தேர்தல்களிலும் தனித்தே போட்டியிட்டு வருகிறது.

2016–ம் ஆண்டு சட்டசபை தேர்தலில் 1.07 சதவீத வாக்குகளை பெற்ற நாம் தமிழர் கட்சி, 2019–ம் ஆண்டு நாடாளுமன்ற தேர்தலில் 3.9 சதவீத வாக்குகளை பெற்றது. தொடர்ந்து நடந்த 2021–ம் ஆண்டு சட்டசபை தேர்தலில் 6.58 ஆக உயர்ந்த அக்கட்சியின் வாக்கு சதவீதம், 2024–ம் ஆண்டு நாடாளுமன்ற தேர்தலில் 8.2 ஆக அதிகரித்தது.

தேர்தலில் ஒரு அரசியல் கட்சி 8 சதவீதத்திற்கும் மேல் வாக்குகளை பெற்றால் மாநில கட்சியாக இந்திய தேர்தல் ஆணையம் அங்கீகரிக்கும் நடைமுறை உள்ளது. அந்த வகையில், கட்சி தொடங்கிய 15 ஆண்டுகளில், அதாவது கடந்த ஆண்டு (2025) ஜனவரி 10–ந் தேதி நாம் தமிழர் கட்சிக்கு மாநில அந்தஸ்து கிடைத்தது. இந்த நிலையில், வரும் சட்டசபை தேர்தலையும் நாம் தமிழர் கட்சி தனித்தே எதிர்கொள்ள இருக்கிறது என்று அக்கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் ஏற்கனவே அறிவித்து விட்டார்.

ஒரு சில கட்சிகள் நாம் தமிழர் கட்சியை கூட்டணிக்கு இழுக்க முயற்சி மேற்கொண்டாலும், அது நடக்கவில்லை. மற்ற கட்சிகள் எல்லாம் அரசியலில் ஒரே பாதையில் நடைபோட, சீமான் சற்று வித்தியாசமான அரசியலையே கையாண்டு வருகிறார். கடந்த ஆண்டு



கடல் மாநாடு, மாடு மாநாடு, மலை மாநாடு, தண்ணீர் மாநாடு என்று அடுத்தடுத்து நடத்தி அனைவரின் கவனத்தையும் ஈர்த்தார்.

இந்த நிலையில், திருச்சியில் இம்மாதம் 21–ந் தேதி (சனிக்கிழமை) நாம் தமிழர் கட்சி சார்பில் "மாற்றத்தை விரும்பும் மக்களின் மாநாடு – 2026" நடைபெற இருக்கிறது. இந்த மாநாட்டில், தமிழகத்தில் 234 தொகுதிகளிலும் களம் காணப்போகும் நாம் தமிழர் கட்சி வேட்பாளர்கள் அறிவிக்கப்பட இருக்கின்றனர்.

வழக்கமாக, நாம் தமிழர் கட்சியில் பெண்களுக்கும் முக்கியத்தும் கொடுக்கும் வகையில் 50 சதவீதம் இடஒதுக்கீடு வழங்கப்பட்டு வருகிறது. அதேபோல், வரும் தேர்தலிலும் 117 தொகுதிகள் பெண்களுக்கு ஒதுக்கப்பட இருக்கின்றன. மேலும், இந்த முறை மாற்றுத்திறனாளிகள், மூன்றாம் பாலினத்தவருக்கும் போட்டியிட வாய்ப்பு வழங்கப்படும் என்று தெரிகிறது.

நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் 2016–ம் ஆண்டு முதல் சட்டசபை தேர்தலில் மட்டும் போட்டியிட்டு வருகிறார். முதல் தேர்தலில் கடலூர் தொகுதியிலும், 2–வது தேர்தலில் (2021) திருவொற்றியூர் தொகுதியிலும் போட்டியிட்டு தோல்வி அடைந்தார். திருவொற்றியூர் தொகுதியில் 3–வது இடம்பிடித்த அவர், 24.3 சதவீத வாக்குகளை பெற்றிருந்தார்.

இந்த முறை எந்த தொகுதியில் சீமான் போட்டியிடுவார் என்ற எதிர்பார்ப்பு அரசியல் வட்டாரத்தில் நிலவுகிறது. இதுகுறித்து நேற்று கருத்து தெரிவித்த சீமான், "இன்னும் வேட்பாளர்கள் அறிவிப்புக்கு 20 நாட்கள் தானே இருக்கிறது. அப்போது தெரியும்" என கூறினார். இந்த முறை சீமான், காரைக்குடி தொகுதியில் களம் காண்வார் என தெரிகிறது.

# கிரடாய் பேர்ப்ரோ 2026: கண்காட்சியில் மனிதத்தேனீ வாழ்த்துரை!

மதுரை, பிப். 02–

மதுரை தமுக்கம் மாநாட்டு அரங்கத்தில் நடைபெற்ற பிரம்மாண்டமான கிரடாய் கண்காட்சியில் சனிக்கிழமை இரண்டாம் நாள் மாலை கவியரசு கண்ணதாசன் நற்பணி மன்றத் தலைவர் மனிதத்தேனீ ரா.சொக்க




லிங்கம் இனிய இல்லம் என்ற தலைப்பில் ஐம்பத்து ஐந்து நிமிடங்கள் பேசுகையில் இது கலைகளின் மாநகர் மதுரையில் கட்டுமானத் துறையில் மணியான நாற்பது பில்டர்ஸ் மற்றும் அதன் தேவைக்கு உரிய பொருட்களின் அரங்குகள், எளிய முறையில் கடன் வழங்க பல்வேறு வங்கி மற்றும் நிறுவனங்கள் இங்கு உள்ளது.

கோவில் மாநகரம், தமிழின் தலைநகரம் இன்று உலகத் தரமான தனி வீடுகள், அப்பார்ட்மெண்ட் வீடுகள், மனை இடங்கள் என மூன்று லட்சம் முதல் மூன்று கோடி வரை அவரவர் விரும்பும் வகையில் உள்ளது.

உலகம் ஒவ்வொரு ஐம்பது ஆண்டுகளில் மாற்றங்களைச் செய்து வருகிறது. இன்றைய இளம் தலைமுறையினர் மற்றும் வளர்ந்த தலைமுறைக்கும் ஏற்ற வகையில் இவர்களது கட்டுமானத் திறன் நகரில் நாற்பது கி மீ தூரம் வரை விரிவாக்கம் செய்துள்ளன.

செய்யும் தொழிலில் மிகுந்த அக்கறையுடன், எளிய அணுகுமுறையால் பெருநகரங்களில் உள்ளது போல நேர்த்தியாக கட்டுமானம் செய்திடும் இங்குள்ள முப்பது பில்டர்கள் முத்திரை பதித்து வருகின்றனர்.

இந்தக் கண்காட்சியில் ஒரே இடத்தில் அனைவருக்கும் ஏற்ற வகையில் வீடுகள் கிடைத்திட வழி வகை செய்யப்பட்டுள்ளது பாராட்டுக்குரியது என்றார்.

மதுரை கிரடாய் அமைப்பின் தலைவர் எஸ்.ஆர்.முத்து விஜயன் தலைமை தாங்கினார், இணைச் செயலாளர் எம். அழகப்பன் வரவேற்புரை ஆற்றினார், ராஜ்குமார் நன்றி கூறினார்.

மாநிலச் செயலாளர் எஸ். ஸ்ரீ குமார் சால்வை அணிவித்தார், பி.சரவணக்குமார் நினைவுப் பரிசு வழங்கினார்.

செயலாளர் டி.யோகேஷ், துணைத் தலைவர் ஜெயச்சந்திரன், பொருளாளர் பி.ஜெயக்குமார், முன்னாள் மாநிலத் தலைவர் ஆர். இளங்கோவன், சேர்மன் எஸ் எஸ். ராமகிருஷ்ணா, முன்னாள் துணைத் தலைவர் பி. ராதாகிருஷ்ணன், இணைச் செயலாளர் ஐ. சையது உமர், அனுஜ் டைல்ஸ் செந்தில் குமார் முன்னிலை வகித்தனர்.

கடந்த வெள்ளிக்கிழமை காலை முதல் நடைபெறும் இக்கண்காட்சி நேற்று ஞாயிற்றுக்கிழமை இரவு வரை நடைபெற்றது.

ஏராளமான பொதுமக்கள் வருகை தந்த வண்ணம் உள்ளனர்.


நிகழ்ச்சியை சிறந்த குரல் வளமும் உச்சரிப்பும் உள்ள சகோதரி சக்தி தொகுத்து வழங்கினார்.

வாழிய கிரடாய் அமைப்பின் பணிகள் வாழியவே.

# வங்கதேசத்தில் 12-ம் தேதி பொதுத்தேர்தல்; இந்தியாவுக்கு அழைப்பு!

டாக்கா, பிப். 02–

வங்கதேசத்தில் நடக்கும் பொதுத்தேர்தலில் சர்வதேச பார்வையாளராக பங்கேற்குமாறு இந்தியாவுக்கு அந்நாட்டு இடைக்கால அரசின் தலைவர் முகமது யூனுஸ்



அழைப்பு விடுத்துள்ளார்.

வங்கதேசத்தில் வரும் 12ம் தேதி பொதுத்தேர்தல் நடைபெற இருக்கிறது. அதோடு, நிர்வாக அதிகாரத்தைக் குறைப்பதற்கான பொதுவாக்கெடுப்பும் ஒரே நாளில் நடைபெறுகிறது. மொத்தம் உள்ள 300 இடங்களுக்கு 50க்கும் மேற்பட்ட அரசியல் கட்சிகளைச் சேர்ந்த சுமார் 2,000 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்.

இந்த நிலையில், தேர்தல் மற்றும் பொதுவாக்கெடுப்பில் சர்வதேச பார்வையாளராக பங்கேற்குமாறு இந்தியாவுக்கு வங்கதேசம் அழைப்பு விடுத்துள்ளது. ஹிந்துக்களுக்கு எதிரான வன்முறைகள் அதிகரித்து வருவதால், வங்கதேசத்தின் மீது மத்திய அரசு பெரும் அதிருப்தியில் இருக்கிறது. எனவே, இந்தியா தனது பார்வையாளர் குழுவை அனுப்புவது குறித்து இன்னும் முடிவெடுக்கவில்லை.

இடைக்கால அரசு வெளியிட்ட தகவலின்படி, இதுவரை மொத்தம் 330 சர்வதேசப் பார்வையாளர்கள் தங்கள் வருகையை உறுதி செய்துள்ளனர். இஸ்லாமிய ஒத்துழைப்பு அமைப்பு, ஐரோப்பிய ஒன்றியம் உள்பட 6 சர்வதேச அமைப்புகள் பார்வையாளர்களை வங்கதேசத்திற்கு அனுப்ப ஒப்புக்கொண்டனர். அதேபோல, 16 நாடுகள், பல்வேறு சர்வதேச அமைப்புகளைச் சேர்ந்த 32 தனிப்பட்ட நபர்கள் என பலர் வருகை தர உள்ளனர். இது குறித்து வங்கதேச இடைக்கால அரசின் தலைமை ஆலோசகர் முகமது யூனுஸின் அலுவலகம் வெளியிட்ட அறிக்கையில், 'கடந்த 2024ல் நடந்த தேர்தலை விட இந்த முறை இரு மடங்கு பார்வையாளர்களின் எண்ணிக்கை இருக்கும்,' என்று தெரிவித்துள்ளது.

# திபெத் புத்த மதத்தலைவர் தலாய் லாமாவுக்கு கிராமி விருது!

லாஸ் ஏஞ்சலஸ், பிப். 02–

திபெத் புத்த மதத் தலைவர் தலாய் லாமாவுக்கு கிராமி விருது வழங்கப்பட்டுள்ளது.

ஆண்டுதோறும் இசையில் சிறந்து விளங்கும் இசைக்கலைஞர்களை கவுரவப்படுத்தும் விதமாக, கிராமி விருது அமெரிக்காவில் வழங்கப்பட்டு வருகிறது. அந்த வகையில், 68வது கிராமி விருது விழா லாஸ் ஏஞ்சலஸ் நகரில் இன்று நடந்தது. இதில், உலகின் முன்னணி பிரபலங்கள் மிடுக்கான உடைகளை அணிந்து பங்கேற்றனர்.

இந்த நிகழ்ச்சியில், திபெத் புத்த மதத் தலைவர் தலாய் லாமாவுக்கு கிராமி விருது அறிவிக்கப்பட்டுள்ளது. சிறந்த ஆடியோ புத்தகம் பிரிவில் 'மெடிடேஷன்ஸ்: தி ரிப்ளெக்ஷன்ஸ் ஆப் ஹிஸ் ஹோலினஸ் தி தலாய் லாமா' (Meditations: The Reflections of His Holiness the Dalai Lama) என்ற ஆல்பத்திற்கு இந்த விருது வழங்கப்பட்டது.

தலாய் லாமாவின் போதனைகளுக்கு கிடைத்துள்ள சர்வதேச அங்கீகாரமாக இந்த கிராமி விருது கருதப்படுகிறது. தலாய் லாமா சார்பாக இசைக்கலைஞர் ரூபஸ் வைன்ரைட் இந்த விருதைப் பெற்றுக்கொண்டார்.

பொழுதுபோக்குத் துறையைச் சேராதவர்கள் கிராமி விருதை வெல்வது இது முதல் முறையல்ல. இதற்கு முன்பாக, அமெரிக்க முன்னாள் அதிபர் ஒபாமா (இரு முறை), மிட்செல் ஒபாமா மற்றும் ஸ்டீவ் ஜாப்ஸ் (மறைவிற்கு பின்) ஆகியோர்



இந்த விருதைப் பெற்றுள்ளனர். இந்த விருது குறித்து தெரிவித்த தலாய் லாமா கூறியதாவது;

இந்த அங்கீகாரத்தை நான் நன்றியுடனும் பணிவுடனும் ஏற்றுக்கொள்கிறேன்.

இதை நான் தனிப்பட்ட சாதனையாகப் பார்க்கவில்லை.

மாறாக,நம் அனைவருக்கும் இருக்கும் உலகளாவிய பொறுப்பிற்குக் கிடைத்த அங்கீகாரமாகவே பார்க்கிறேன். அமைதி, கருணை மற்றும் மனிதநேயம் ஆகியவற்றின் மீது மிகுந்த நம்பிக்கை வைத்துள்ளேன். இதனை உலகளவில் எடுத்துச் செல்ல இந்த விருது உதவும் என்று நான் நம்புகிறேன், இவ்வாறு அவர் கூறினார்.

**கிராமி விருது வென்றவர்களின் பட்டியல்**

ஆண்டின் சிறந்த ஆல்பம் : Debi Tirar Mas Fotos – பேட் பண்ணி

ஆண்டின் சிறந்த பதிவு : Luther – கென்ட்ரிக் லாமர்

நீண்ட கால வளர்ச்சிக்கு அடித்தளம் அமைக்கும்

நீண்ட கால வளர்ச்சிக்கு அடித்தளம் அமைக்கும்

ஆண்டின் சிறந்த பாடல் : Wildflower – பில்லி எலிஷ்

சிறந்த அறிமுக நட்சத்திரம் : ஒலிவியா டீன்

பாப் மற்றும் ராக் சிறந்த பாப் குரல் ஆல்பம்: MAYHEM – லேடி காகா

சிறந்த பாப் தனிநபருக்கான விருது: Messy – லோலா யங்

சிறந்த பாப் டூயட்/குழுவுக்கான விருது : Defying Gravity – சிந்தியா எரிவோ மற்றும் அரியானா கிராண்டே

சிறந்த ராக் ஆல்பம்: NEVER ENOUGH – டர்ன்ஸ்டைல்

சிறந்த ஆல்டர்நேட்டிவ் மியூசிக் ஆல்பம்: Songs Of A Lost World – தி கியூர்

சிறந்த ராப் ஆல்பம்: GNX – கென்ட்ரிக் லாமர்

சிறந்த ராப் பாடல்: tv off – ஜாக் ஆண்டனாப், கென்ட்ரிக் லாமர் மற்றும் குழுவினர்.

# ஆட்சியில் பங்கு கேட்பது ம.தி.மு.க.வின் நோக்கம் அல்ல - வைகோ!

கோவை, பிப். 02–

ம.தி.மு.க பொதுச் செயலாளர் வைகோ இன்று காலை கோவை விமான நிலையத்தில் நிருபர்களிடம் கூறியதாவது:–

பாராளுமன்றத்தில் நேற்று தாக்கல் செய்யப்பட்ட 2026–2027 மத்திய அரசின் நிதிநிலை அறிக்கை மிகுந்த ஏமாற்றம் அளிக்கிறது.

சட்டசபை தேர்தலை கருத்தில் கொண்டு மாநிலங்களுக்கு கூடுதல் நிதி ஒதுக்கீடு மற்றும் மக்கள் நல திட்டங்களுக்கு முக்கியத்துவம் வழங்கப்படும் என்று எதிர்பார்த்தோம். ஆனால் அந்த எதிர்பார்ப்பு முற்றிலும் பொய்த்து உள்ளது.

கச்சா எண்ணெய் விலை சர்வதேச சந்தையில் 50 டாலர்களாக குறைந்தபோதிலும், பெட்ரோல்–டீசல் விலை குறைக்கப்படாதது பொது மக்களுக்கு பெரும் சுமையாக உள்ளது. மக்களின் மீதான சுமையை குறைக்க மத்திய அரசு எந்த முனைப்பும் காட்டவில்லை.

11 லட்சம் கோடி ரூபாய் கடன் வாங்க உள்ளதாக மத்திய அரசு அறிவித்து உள்ள நிலையில், 7 சதவீத பொருளாதார வளர்ச்சியை அடைய முடியும் என்பது நடைமுறைக்கு சார்ந்தது அல்ல. அதுவும்தவிர இது நாட்டின் எதிர்கால பொருளாதார நிலைக்கு நல்ல அறிகுறி அல்ல.



கோவை, ஈரோடு ஆகிய பகுதிகளில் உள்ள நூற்பாலைகள் மற்றும் ஜவுளித் துறைக்காக எந்தவித சிறப்பு திட்டங்களும் நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்படவில்லை.

அதேபோல மெட்ரோ ரெயில் திட்டங்களுக்கு போதிய நிதி ஒதுக்கீடு செய்யப்படாதது வருத்தம் அளிப்பதாக உள்ளது. இருப்பினும் சுங்கவரியை குறைத்து உள்ளது மட்டும் வரவேற்கத்தக்க நடவடிக்கை. ஆட்சியில் அதிகாரப் பங்கு கோரிக்கை வைப்பது ம.தி.மு.க.வின் நோக்கம் அல்ல. வருகிற சட்டசபை தேர்தலில் தி.மு.க. தனிப்பெரும்பான்மை பெற்று வெற்றி பெறும். திராவிட மாடல் ஆட்சி தொடரும். முதலமைச்சராக மு.க.ஸ்டாலின் மீண்டும் பொறுப்பேற்பார்.

பிரதமர் நரேந்திர மோடிக்கு தேசிய அளவில் நல்ல பெயர் இல்லை. இரட்டை இலக்கத்தில் தொகுதிகள் கேட்பது குறித்த பேச்சுகளை முன்கூட்டியே பேச முடியாது. கூட்டணி பேச்சுவார்த்தை முடிந்தபிறகே சீட் பங்கீடு தொடர்பான முடிவுகள் எடுக்கப்படும். சட்டசபை தேர்தலை முன்னிட்டு தமிழகம் முழுவதும் நான் பிரசாரம் மேற்கொள்ள உள்ளேன்.

இவ்வாறு அவர் கூறினார்.

அப்போது மாவட்ட செயலாளர் கணபதி செல்வராஜ், உயர்மட்டக்குழு உறுப்பினர் மோகன்ராஜ் மற்றும் நிர்வாகிகள் பலர் உடன் இருந்தனர்.

# திமுக , அதிமுக , பாஜ கட்சிகள் மீது விஜய் கடும் விமர்சனம்!



சென்னை, பிப். 02–

தவெக மூன்றாம் ஆண்டு தொடக்க விழாவில் நடிகர் விஜய் பேசியதாவது :–

நமது கட்சியின் மூன்றாம் ஆண்டு தொடக்க விழா . இன்றைக்கு தமிழகத்தில் மிகப்பெரிய கட்சியாக வளர்ந்து இருக்கிறோம் என்றால் , அது உங்களால் தான் . நம்மை நேசிக்கும் கோடிக்கணக்கான மக்களும் தான் , அதுக்கு ஒரு மிக முக்கிய காரணம் . நீங்கள் எங்களுடைய மிகப்பெரிய பலம் . உங்களை நம்பி தான் நானும் , நமது கட்சியும் இருக்கிறோம்

இதை நான் சொல்லி தான் உங்களுக்கு தெரிய வேண்டும் என்ற அவசியம் இல்லை . இது உங்கள் எல்லோருக்கும் நன்றாக தெரியும் . கட்சியினர் அனைவருக்கும் வாழ்த்துக்கள் . மைக்கை பிடித்தாச்சு , வெடியை கொளுத்தி போட்டுவிடலாமா? கண்ணீரை துடைக்க . . ஆயிரத்து தொள்ளாயிரத்து எழுபத்து ஏழு ஜூன் மாதம் எம்ஜிஆர் ரேடியோவில் ஒரு பேட்டி கொடுத்தார் . அண்ணாதுரை இருந்த இடத்தில் இப்படிப்பட்டவர்களும் அமரும் நிலைமை ஏற்பட்டதை நினைத்து எண்ணி , எண்ணி கண்ணீர் வடித்தேன் என எம்ஜிஆர் கூறினார்

அன்றைக்கு அந்த கண்ணீரை துடைக்க ஆரம்பித்த இயக்கம் தான் அதிமுக என சொன்னார் . அதே மாதிரி இரண்டு பூஜ்ஜியம் ஒன்று ஏழு இரண்டு பூஜ்ஜியம் இரண்டு ஒன்று ஆம் ஆண்டுக்கு பிறகு தமிழகத்தின் நிலைமையை யோசித்து பார்த்த மக்கள் , காமராஜர் , அண்ணாதுரை , எம்ஜிஆர் அமர்ந்த இடத்தில் இப்படிப்பட்டவர்களும் அமரும் நிலைமை ஏற்பட்டது என்று கண்ணீர் வடித்தார்கள் . இன்றைக்கு கண்ணீரை துடைக்க ஆரம்பித்த இயக்கம் தான் தமிழக வெற்றிக்கழகம் . இப்படி எல்லாம் பேசுவதால் சில பேர் கொந்தளிப்பார்கள்

பவள விழா பாப்பா . எம்ஜிஆர் கட்சி ஆரம்பித்த போது , ஜெயித்த போது கூட சட்டசபையில் ஒரு நடிகர் கட்சி வந்து இருக்கிறதாம் , ஏதோ ஒரு புதிய கட்சி வந்து இருக்கிறது என கேலியும் , கிண்டலும் செய்தனர் . யார் அரசியலுக்கு வந்தாலும் கொந்தளிப்பது தான் அவர்களுடைய வேலை . அவர்கள் செய்யும் அட்ராசிட்டி பற்றி நாம் எடுத்து சொன்னால் , அவர்கள் செய்யும் ஊழல் குறித்து நாம் எடுத்து சொன்னால் , ஐம்பது ஆண்டுக்கு முன் இருந்த அதே தகர டப்பாவை எடுத்து உருட்ட ஆரம்பித்து விடுவார்கள்

பவள விழா பாப்பாவுக்கு என்ன தெரியும் . பழைய டப்பாவை உருட்டத்தானே தெரியும் ? நாம் அவர்கள் செய்யும் தவறை சொல்லாமல் இருக்க முடியுமா ? சொல்லுவோம் , சொல்லிக்கொண்டே இருப்போம் . அவர்களை கேள்வி கேட்க நம்மை தவிர வேறு யாருக்கு தைரியம் இருக்கிறது

? திருக்குறள் . இன்றைக்கு டிஜிட்டல் உலகத்தில் திருவள்ளுவர் இருந்திருத்தால் இந்த தீயசக்தி பற்றி என்ன திருக்குறள் எழுதியிருப்பார் . அநீதி அராஜகம் தில்லுமுல்லு இவையெல்லாம் திமுக முதற்றே உலகு என எழுதியிருப்பார்

மும்முனை போட்டி , நான்கு முனை போட்டி என்றெல்லாம் சொல்கிறார்கள் . அவர்களை பொறுத்தவரைக்கும் அப்படி இருக்கட்டும் . மாபெரும் மக்கள் கூட்டணி சக்தியை கொண்ட நாம் ஒரு அணி ஒருபக்கம் , திமுக கூட்டணி ஒருபக்கம் , பாஜ . , கூட்டணி மற்றும் பலர் . எத்தனை சக்திகள் வந்தாலும் திமுகவை வீழ்த்த தவெகவால் மட்டும் தான் முடியும் . இவ்வாறு விஜய் பேசினார்.

# ஏறிய வேகத்தில் இறங்கி வரும் தங்கம், வெள்ளி விலை!



சென்னை, பிப். 02–

தங்கம் விலை அதிரடியாக குறைந்துள்ளது. சென்னையில் 22 கேரட் ஆபரணத் தங்கத்தின் விலை சவரனுக்கு ரூ.7,600 குறைந்து ரூ.1,11,600–க்கு விற்பனை செய்யப்படுகிறது. தங்கம் விலை கிராமுக்கு ரூ.950 குறைந்து ரூ.13,950–க்கு விற்பனை செய்யப்படுகிறது. தங்கத்தை தொடர்ந்து வெள்ளி விலையும் குறைந்துள்ளது. வெள்ளி கிராமுக்கு ரூ.20 குறைந்து ஒரு கிராம் வெள்ளி ரூ.300–க்கும் பார் வெள்ளி 3 லட்சத்திற்கும் விற்பனை செய்யப்படுகிறது.


# தேவை

தமிழகத்தில் இயங்கி வரும் பிரபல தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழுக்கு, தமிழகம் முழுவதும் துடிப்பும், ஆர்வமும் மிக்க இளைஞர்கள் செய்திகள் சேகரிக்க மற்றும் புகைப்படம் எடுக்க தேவை.

தொடர்புக்கு:
செல் : 7904806432
போன்: 0452 – 4916699


Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020